21-08-2025.
O.S.No. 54/2024
வா. சா. 1 சரவணக்குமார் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.
1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் சின்னபொம்மன்பட்டியில் வசிக்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தார். என் அப்பா பெயர் குமாரசாமி. என் அம்மா பெயர் சாரதாமணி. என் தாயாரின் அப்பாவழி சொத்தில் பாக உரிமை கேட்கின்றேன். என் தாயாரின் அப்பா பெயர் பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கர். பங்காரு கிருஷ்ணசாமியின் அப்பா பெயர் பொம்முசாமி நாயக்கர். பொம்முசாமிநாயக்கரின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியாது. பொம்முசாமி நாயக்கருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் எனக்குத் தெரியாது. பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கருக்கு இரண்டு மனைவிகள். 1. பொம்முத்தாய். 2. வேலுத்தாய் ஆவார்கள். பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கருக்கு உடன்பிறந்தவர்கள் இருக்கிறார்களா என்றால் எனக்கு தெரிய பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கர் மட்டும்தான் உள்ளார். மற்ற உடன்பிறந்தவர்கள் இல்லை. பொம்முத்தாய்க்கு இரண்டு பெண் குழந்தைகள். 1. சாரதாமணி (என் தாயார்) 2. தமிழரசி. வேலுத்தாய்க்கு 3 குழந்தைகள். இரண்டு பெண். ஒரு ஆண். 1. வல்லக தொப்பா நாயக்கர், 2. ராஜாமணி, 3. ஜெகதா ஆவார்கள். அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். என் அம்மாவிற்கு நான் ஒரே வாரிசு. சாரதாமணி எந்த வருடம் என் அப்பாவை திருமணம் செய்துகொண்டார் என்றால் எனக்கு தெரியாது. என் அம்மாவின் இறப்புச்சான்று தாக்கல் செய்துள்ளேன். பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கரின் இறப்புச்சான்று தாக்கல் செய்துள்ளேன். அவரது வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என் அம்மாவை என் அப்பா திருமணம் செய்தபோது என் அம்மாவுக்கு என் தாத்தா சொத்து எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.

சின்னபொம்மன்பட்டியில் உள்ள சொத்தில் என் அம்மாவிற்கு என் தாத்தா சொத்து எதுவும் கொடுக்கவில்லை. தாவாச்சொத்து எங்கு உள்ளது என்பது எனக்குத் தெரியும். சொத்து எங்கெங்கு உள்ளது என்பது பற்றி என் தாத்தா சொல்லித் தெரியும். என் தாயார் 1980ம் வருடம் இறந்தார். தாவாச்சொத்தின் பட்டா எண் 331 மற்றும் 951. எனது சித்தி தமிழரசி என் அப்பாவின் தம்பி துரைச்சாமியை திருமணம் செய்துள்ளார். தாவாச்சொத்தில் பிரதிவாதிகளிடம் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி பல தேதிகளில் கேட்டேன். எந்த தேதியில் கேட்டேன் என எனக்கு தெரியவில்லை. என் தாய்வழி பாட்டனார் சொத்தில் 1/10 பாகம் கேட்டுள்ளேன். என் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள். 2வது மனைவி பெயர் ஜெகதா. அவர் வேலுத்தாயின் மகள். என் அம்மாவிற்கு திருமணமாகும்போதே அவரது தகப்பனார் பங்காரு கிருஷ்ணசாமி நாயக்கர் என் அம்மா இருக்கும்போதே சொத்து வாங்கிக்கொடுத்து விட்டார் என்றும் நான் வேண்டுமென்றே பாக உரிமை கேட்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2 முதல் 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – வழக்குரைஞர்களின் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.08.21 18:07:06 +0530

Principal District Judge,
Dindigul.